பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 02 2026 THURSDAY 12.40 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய பட்ஜெட் எவ்வாறு பங்களிக்கும் என்பதை நிதியமைச்சர் தமது பதிலுரையில் விரிவாக எடுத்துரைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தம் வரலாற்று சிறப்புமிக்கது என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

3. புதிய தொழிலாளர் நலச்சட்டங்கள் மகளிரின் பாதுகாப்பை உறுதி செய்யும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையத்தின் குழுவினர் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

5. உலக பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிருஷ்ணா நாகர் — நித்யஸ்ரீ சுமதி சிவன் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்---

<<<<<>>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய பட்ஜெட் எவ்வாறு பங்களிக்கும் என்பதை நிதியமைச்சர் தமது பதிலுரையில் விரிவாக எடுத்துரைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்து திருமதி நிர்மலா சீதராமன் நேற்று உரையாற்றியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சீர்திருத்தங்கள் தொடரும் என்றும், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு பட்ஜெட் எவ்வாறு உதவும் என்றும் நிதியமைச்சர் தமது பதிலுரையில் விரிவாக எடுத்துரைத்துள்ளதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை நடவடிக்கைகள் இன்றும் பாதிக்கப்பட்டன.

அவை கூடியதும் அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்தை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர்.

இதன் காரணமாக ஏற்பட்ட கூச்சல், குழப்பத்தையடுத்து அவை நடவடிக்கைகள் நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

இதனைத்தொடர்ந்து, 12 மணிக்கு கூடிய அவை நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்தை திரும்பப்பெற வேண்டும் என்று வலியுறுத்தி, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

<<<<<>>>>>>

இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தம் வரலாற்று சிறப்புமிக்கது என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடந்த சில மாதங்களில் ஜப்பான், கொரியா போன்ற நாடுகளுடனும் அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டதை சுட்டிக்காட்டினார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்காவின் இறக்குமதி, ஏற்றுமதி அதிகரிக்கும் என்றும் திரு டோனல்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

இதற்கிடையே, அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிக்கும் என்று பாரத ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த வங்கி வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், இந்த ஒப்பந்தத்தின் மூலம், நாட்டின் ஏற்றுமதி வருடந்தோறும் 15 மடங்கு அதிகரிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த ஒப்பந்தம் நமது தேயிலைக்கு கூடுதல் விலை கிடைக்க உதவிடும் என்று தேயிலை வாரியத்தின் முன்னாள் துணைத் தலைவர் திரு ராஜேஷ் எமது நீலகிரி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — ராஜேஷ் — 46 Sec.)***

<<<<<>>>>>>

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி ஆதாரமற்ற தகவல்களை தெரிவித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எவ்வித ஆதாரமும் இன்றி திரு ராகுல்காந்தி கருத்துகளை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்றார்.

நாடாளுமன்றத்தில் மட்டுமின்றி பொது வெளியிலும் திரு ராகுல்காந்தியின் செயல்பாடுகள், அவரது முதிர்ச்சியின்மையை வெளிப்படுத்துவதாக திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தொழிலாளர் நலனுக்கான நான்கு புதிய சட்டங்கள் மகளிர் பாதுகாப்பை உறுதி செய்யும் என்று மத்திய இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மகளிர் மேம்பாட்டிற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதையே இது எடுத்துரைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, எளிமையான நெறிமுறைகள், பாதுகாப்பான வேலை, உறுதியான எதிர்காலம் போன்றவை இந்த புதிய தொழிலாளர் சட்டங்களின் நோக்கமாகும் என்று சென்னையில் உள்ள மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையாளர் திரு விஜய் ஆனந்த் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — விஜய் ஆனந்த் - 42 Sec. )***

<<<<<>>>>>>

ஆரிய சமாஜத்தை நிறுவிய சுவாமி தயானந்த சரஸ்வதியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மற்றும் பலர் வாழ்த்து செய்தி விடுத்துள்ளனர்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அடித்தளமாக தூய்மை இந்தியா இயக்கம் திகழ்கிறது என்று மத்திய சுகாதாரத்துறை செயலர் திருமதி **Punya Salia Srivastava** கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் ரெய்பரேலியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

சுகாதாரத்துறையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொலைபேசி வழி மருத்துவ சேவை வழங்கும் இ-சஞ்ஜீவினி திட்டத்தின்மூலம் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஆயுஷ்மான் பாரத் சுகாதாரத் திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி **Punya Salia Srivastava** தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைய குழுவினர் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

துணை தேர்தல் ஆணையர்கள், திரு. மனோஜ் கார்க், திரு. பவன்குமார் சர்மா, திரு. சஞ்சய் குமார், திரு. பானுபிரகாஷ் யெட்டுரு உட்பட 7 பேர் கொண்ட குழுவினர் இந்த ஆலோசனையை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் மற்றும் காவல்துறை உயரதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

இக்குழுவினர் நாளை மாவட்ட ஆட்சியர்களுடனும் ஆலோசனை மேற்கொள்ள உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

உத்தராகண்டில் மின் விநியோகம் தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி இன்று அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

டேராடூனில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், மின் விநியோகம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>>

பஞ்சாபில் சட்டம் - ஒழுங்கு நிலைமை குறித்து முதலமைச்சர் திரு பகவந்த் மான் இன்று காவல்துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

சண்டிகரில் நடைபெற்ற இந்த ஆய்வுக்கூட்த்தில் காவல்துறை உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

போதைப்பொருள் புழக்கத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

பங்களாதேஷ் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

காலை ஏழரை மணிக்கு தொடங்கிய இந்த வாக்குப்பதிவு மாலை நான்கரை மணிவரை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

<<<<<>>>>>>

உலக பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிருஷ்ணா நாகர் — நித்யஸ்ரீ சுமதி சிவன் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பக்ரைனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **21-8, 21-16** என்ற செட் கணக்கில், கனடாவின் **Justin Kendrick — Collen Cloetta** இணையை வென்றது.

மற்றொரு கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Chirag Baretha — Mandeep Kaur** இணையும் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

----------------

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நமீபியாவை எதிர்கொள்கிறது.

தில்லியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

--------------------

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

ரூர்கேலாவில் இப்போட்டி இரவு 7.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<END>>>>>>**